DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.106/2026

**prosecution witness: LW-1 as PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரா | தொழில்/ பதவி | : | கூலி |
| க/பெ. | : | நாகேந்திரன் | வயது | : | 48 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>23.06.2026</u>

( எதிரி சிறையில் இருந்து ஆஜர். எதிரி தரப்பு இலவச சட்ட வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது இராமேஸ்வரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். எனக்கு சுமார் 4 மாதத்திற்கு முன்பு என் வீட்டில் நான் நடந்து சென்றபோது கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி மீது சந்தேகத்தின்பேரில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. நானும் எனது மகனும் எங்களுக்குள் பேசி நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டோம்.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். ஆஜர் எதிரி எனது மகன் என்றும் அவனுக்கு திருமணம் ஆகவில்லை என்றும் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றும் எனது மகன் வேலை பார்த்து கிடைக்கும் வருமானத்தில் எப்போதும் மது அருந்திவிட்டு என்னிடம் பிரச்சனை செய்து கொண்டேயிருப்பான் என்றும் எனது மகள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் என்னிடமும் எதிரியின் தங்கையான ஆதிசக்தியிடமும் பிரச்சனை செய்து கொண்டிருந்தார் என்றும்

2. இந்நிலையில் 16.02.2026 ம் தேதி இரவு சுமார் 9.30 மணிக்கு நானும் எனது மகள் ஆதிசக்தியும் பேரக்குழந்தைகளுடன் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது எனது மகன் மதுபோதையில் வந்து செங்கலை வைத்து அடிக்க முயன்றபோது நான் தடுத்தேன் என்றும் அந்த செங்கலை வைத்து எனது தலையில் அடித்தததால் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அக்கம்பக்கத்தினர் சத்தம் கேட்டு வந்து விலக்கிவிட்டார்கள் என்றும் அப்போதுஅக்கம்பக்கத்தினரை பார்த்து செங்கலை காட்டி மிரட்டி விட்டு சென்றார் என்றும் காயம்பட்ட என்னை எனது மகள் போக்குவண்டியில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் போலீசார் வந்து விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரி எனது மகன் என்பதால் அவரை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.23 14:38:17 +0530